1980 பிப்ரவரி 13]

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கைப்படி அங்கு பணி புரியக்கூடிய 1,350 தொழிலாளர்களில் சுமார் 200 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அண்மையில் ஜாயின்ட் கமிஷனுடைய ஆலோசனையை இரு சாராரும், நிர்வாகத் தரப்பும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திடக் கூடிய சூழ்நிலை இருந்தும் நிர்வாகத்தினர் வாபஸ் வாங்கி விட்டார்கள். பேக் அடித்துவிட்டார்கள். ஆகவே ஜாயின்ட் கமிஷனுடைய ஆலோசனையை புறக்கணித்து விட்டார்கள். இன்றைக்கு ஆயிரம் தொழிலாளர்கள் வெளியே இருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நிர்வாகத் தரப்பை வலியுறுத்தி அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இவைகளை யெல்லாம் மனத்திற்கொண்டு நாளை மறுநாள் 15 ஆம் தேதியன்று சென்னையில் என் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடக்க இருக்கிறது என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உள்ளூர்காரர்களுக்கே வேலை என்கிற கர்நாடக மாநில கொள்கை அறிவிப்பு குறித்து:

திரு. க. சுப்பு: அடுத்து நான் சொல்ல விரும்புவது ரொம்ப முக்கியமான பிரச்சினை. நம்முடைய அவையின் முன்னவர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லி விட்டால் போதும்.

திரு. க. சுப்பு: கர்நாடக மாநிலத்திலே பெங்களூர், பத்திராவதி போன்ற இடங்களில் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஒரு உத்தரவு முன்பே போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங்களிலேயிருந்து வருபவர்களுக்கு வேலை கிடைக்காத அளவிற்கு ஒரு உத்தரவு, அங்கே அரசு உத்தரவு ஒன்று போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே அப்படியிருப்பதாகச் சொல்லிக் கொண்டு அப்படிப் போடப்பட்டிருக்கிறது. நான் போய் இருக்கும் பொழுதுகூடச் சொன்னார்கள்.

(திரு. க. சுப்பு)

இன்றைக்கு வந்திருக்கக்கூடிய அரசும் அதைத் தீவிரமாக அமல் படுத்தப் போகிறது என்று வந்த அறிவிப்பை யொட்டி அங்கேயிருக்கக்கூடிய தமிழர்கள், மற்றவர்கள் அதாவது கன்னடியர் அல்லாத மற்றவர்களுக்கு வேலையே கிடைக்காது என்ற ஒரு மோசமான நிலைமை அங்கே உருவாக்கப் பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் நாயனார் அவர்களேகூட ரொம்ப வருத்தத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் அது கவனத்திற்கு வந்திருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் புரிந்து கொண்டேன். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய நியாயமான உணர்வுகளின் அடிப்படையில் தமிழக முதல்வர் கர்நாடக மாநில முதல்வரோடு தொடர்பு கொண்டு அது குறித்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

ஏ. கல்லூரிகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் அழகர்சாமி, கூத்தகுடி சண்முகம், சிவசாமி, உத்ராபதி, காளியப்பன், கோவிந்தராசன், கு. ரமணி ஆகியோர் கொடுத்துள்ள தீர்மானம்.

திரு. கூத்தகுடி க. சண்முகம்: தலைவரவர்களே பள்ளத்தூர் சீதாலட்சுமி கல்லூரி சம்பந்தமாகவும், அதைத் தொடர்ந்து செயின்ட் ஜோசப் கல்லூரி, நாமக்கல் கல்லூரி சம்பந்தமாகவும் நான் ஏற்கெனவே கொடுத்த அறிவிப்புகள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி வந்திருக்கிறது. முதலிலே சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர், அதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. சேவியர் பிச்சையா என்ற ஆசிரியர், திருச்சி புனித ஜோசப் கல்லூரியிலிருந்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவரை மீண்டும் பணியிலமர்த்தக் கோரி ஆசிரியர் சங்கம் போராட்டம் நடத்தி வருகிறது. மேற்படி சங்கத்தைச்